பேரவைத் தலைவருடன் அதிமுக கொறடா சந்திப்பு

சென்னை, ஜூலை 27: அதிமுகவில் இருந்து கட்சி தாவிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள விளக்க நகலை அளிக்க வேண்டும் என சட்டப் பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகரிடம் கோரிக்கை விடுத்ததாக அக்கட்சியின் கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகரை, அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பதவியை ராஜிநாமா செய்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த விளக்க கடிதநகலை எங்களுக்கு கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கடித நகலைப் பார்த்து உரிய விளக்கம் அளிக்க முடியும் என தெரிவித்தோம். ராஜிநாமா செய்த பேரவை உறுப்பினர்கள் அளித்த விளக்க கடித நகல்களை வழங்குவதாக பேரவைத் தலைவர் தெரிவித்தார் என்றார் அவர்.

சிவகாசி அருகே பட்டாசு வெடி விபத்தில் மேலும் 3 பேர் உயிரிழப்பு

சிவகாசி/சாத்தூர், ஜூலை 27: விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே செங்கமலப்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை சட்ட விரோதமாக பட்டாசுகள் தயாரித்த போது ஏற்பட்ட வெடி விபத்தில் மேலும் மூவர் உயிரிழந்தனர். இதையடுத்து, இந்த விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 5-ஆக உயர்ந்தது.

செங்கமலப்பட்டியில் சகோதரர்களான ராம்பிரகாஷ் (32), ராமச்சந்திரன் (40) ஆகியோர் தங்களது தோட்டத்தில் தகரக் கூரை அமைத்து சட்டவிரோதமாக பட்டாசுகள் தயாரித்து வந்தனர். ஞாயிற்றுக்கிழமை பட்டாசு தயாரிக்கும் பணியில் ராம்பிரகாஷ், ஐயப்பராஜ் (42), பாண்டித்துரை (38), மீனம்பட்டியைச் சேர்ந்த இன்னாசிமுத்து (40) ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். ராமசந்திரன் தகரக் கூரையின் வெளியே நின்று கொண்டிருந்தார். அப்போது, ஏற்பட்ட வெடி விபத்தில் ராம்பிரகாஷ், இன்னாசிமுத்து ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

பலத்த காயமடைந்த ராமச்சந்திரன் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு உயிரிழந்தார். இந்த விபத்தில் ஐயப்பராஜ், பாண்டித்துரை ஆகியோரை உடனடியாக மீட்க முடியாததால், அவர்கள் இருவரும் விபத்தில் இறந்திருக்கலாம் என போலீஸார் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

காலமானார் கருணாம்பாள் வாணவராயர் (78)

பொள்ளாச்சி, ஜூலை 27: மறைந்த தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கத்தின் மகளும், என்ஜிஎம் கல்லூரித் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் மனைவியுமான கருணாம்பாள் வாணவராயர் (78) கோவையில் உள்ள அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 26) இரவு காலமானார்.



இவரது இறுதிச் சடங்குகள் பொள்ளாச்சியை அடுத்த சமத்தூர் அரண்மனைத் தோட்டத்தில் திங்கள்கிழமை மாலை நடைபெற்றன. இவருக்கு கணவர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், மகள் கற்பகவல்லி ராஜ்குமார், மகன் சங்கர் வாணவராயர் ஆகியோர் உள்ளனர்.

மறைந்த கருணாம்பாள் வாணவராயர் தனது தந்தையின் வழியில் பல்வேறு கல்வி, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். கோவையில் உள்ள பவன் கலாசார மையத்தின் பொறுப்பாளராக 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி, மாணவர்களுக்கு கலை, கலாசாரம், அறநெறி தொடர்பான வகுப்புகளை நடத்தி வந்தார். 'மங்கையர்க்கரசியார் அறநெறி அறக்கட்டளை' என்னும் அமைப்பை நிறுவி, தனியாக ஆசிரியர்களை நியமித்து பல பள்ளிகளில் மாணவர்களுக்கு அறநெறி பாடங்களைக் கற்பித்து வந்துள்ளார்.

இரங்கல்: இவரது மறைவுக்கு, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி.அருண்ராஜ், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, தங்கம் தென்னரசு, அர.சக்கரபாணி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கரூர் சம்பவம்: அரசுப் பணி நியமனம் ரத்து

மதுரை, ஜூலை 27: கரூரில் தவெக பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட அரசுப் பணி நியமன ஆணைகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு திங்கள்கிழமை உத்தரவிட்டது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 10 குழந்தைகள், 18 பெண்கள், 13 ஆண்கள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இது தொடர்பாக சிபிஐ விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி தமிழக அரசு சார்பில் கடந்த ஜூலை 10-ஆம் தேதி வழங்கப்பட்டது.

இதனிடையே, 'பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு வேலை வழங்குவது தொடர்பாக முறையான வழிகாட்டுதல்கள் அல்லது கொள்கை முடிவுகள் வகுக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கவோ, நிர்வாக நடவடிக்கை எடுக்கவோ கூடாது. உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்த வழக்கில் இறுதித் தீர்ப்பு வரும் வரை அரசுப் பணி வழங்குவதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்' எனக் கோரி மனித

உயர்நீதிமன்றம் உத்தரவு

நேய ஜனநாயகக் கட்சி மாநில துணைச் செயலர் சீனி அஹமது, நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த தீரன் திருமுருகன், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரைச் சேர்ந்த சந்தோஷ் குமார் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுக்கள் தாக்கல் செய்தனர்.



இந்த மனுக்களை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஜூலை 27-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர். சக்திவேல் ஆகியோர் முன் திங்கள்கிழமை இந்த மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது, 'வயது, கல்வித் தகுதி போன்ற நிலையான வழிகாட்டுதல்களின் படியே கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் இந்த விதிமுறைகளைப் பின்பற்றியே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன' என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டால், பேருந்து விபத்துகள், சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்துகள் போன்ற நிகழ்வுகளிலும் இதேபோன்ற கோரிக்கைகள் எழக்கூடும். கருணை அடிப்படையில் வேலை கிடைக்க பலர் காத்திருக்கும் நிலையில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது ஏன்?.

கருணை அடிப்படையில் வழங்கப்படும் பணி நியமனங்களை முறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் வழக்கமான ஒப்புதல் நடைமுறைகளிலிருந்து கரூர் சம்பவ நியமனங்களுக்கு அரசு விலக்கு அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனத்துக்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழக அரசுத் தரப்பில் சாதாரண பணி வழங்கியதாகக் கூறுவதை ஏற்க முடியாது. எந்தப் பணியும் சாதாரண பணியல்ல. அது ஒவ்வொருவரின் குடும்பத்துக்கு உதவும் பணியே.

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தவெக அரசு வழங்கிய இந்தப் பணி நியமன ஆணைகள் சட்டத்தின் முன் சமத்துவத்தையும், அரசுப் பணியில் சம வாய்ப்பையும் உறுதி செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 14, 16-ஆவது பிரிவுகளுக்கு முரணாக உள்ளன. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசுப் பணி வழங்குவதைவிட, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், வாழ்வாதார உதவிகளை வழங்குவதே மிகப் பொருத்தமான, நிலையான மறுவாழ்வு முறையாக இருக்கக்கூடும். எனவே, கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட பணி நியமன ஆணைகள் ரத்து செய்யப்படுகின்றன என்றனர் நீதிபதிகள்.

மேல்முறையீடு செய்ய தமிழக அரசு முடிவு

சென்னை, ஜூலை 27: கரூர் சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட பணி நியமன அரசாணையை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்யும் என சட்டத் துறை அமைச்சர் ஆர்.நிர்மல் குமார் தெரிவித்தார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் நிர்மல் குமாரிடம் இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்து அவர் கூறியதாவது:

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் நகலை முழுமையாகப் பெற்று முழு விவரங்களும் சட்ட ரீதியாக ஆய்வு செய்யப்படும். தீர்ப்பின் சட்ட அம்சங்கள் குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்த பின்னர், தமிழக அரசின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் எடுத்துரைக்கும் வகையில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்றார் அவர்.

திமுக ஆட்சியின் முறைகேடுகளை விசாரிப்பதில் தவெக அரசு மெத்தனம்

நிழல் நிதி நிலை அறிக்கை வெளியிட்டு அன்புமணி

சென்னை, ஜூலை 27: கடந்த திமுக ஆட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி வழக்குப் பதிவு செய்யும் நடவடிக்கையில் தவெக அரசு மெத்தனமாகச் செயல்படுவதாக நிழல் நிதி நிலை அறிக்கையை வெளியிட்ட பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறினார்.



சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பாமக நிழல் நிதிநிலை அறிக்கையை வெளியிட்ட அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ். உடன் பாமக நிர்வாகிகள்.

பாமக சார்பில் 24-ஆவது ஆண்டு நிழல் நிதி நிலை அறிக்கையை சென்னை தி.நகரில் உள்ள தனியார் விடுதியில் அன்புமணி ராமதாஸ் திங்கள்கிழமை வெளியிட்டு, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

137 திட்ட பரிந்துரைகள்: தமிழகத்தில் கனிம வளங்களை முறையாகக் கையாள்வதன் மூலம் வரி அல்லாத வருவாயாக ரூ.2.17 லட்சம் கோடி வருவாய் ஈட்டலாம். மொத்த செலவினம் ரூ.6.96 லட்சம் கோடி எனில், வருவாய் செலவினம் ரூ.6.10 லட்சம் கோடியாக்கலாம். அதன்படி ரூ.50 ஆயிரம் கோடி நிலுவை கடனை செலுத்தலாம். இவ்வாறு செயல்பட்டால் 10 ஆண்டுகளில் கடன் சுமை கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

சமூகநீதி கணக்கெடுப்பு நடத்துதல், சமையல் எரிவாயுக்கு ரூ.300 மானியம், 6 மாதங்களில் லட்சம் பேருக்கு அரசு வேலை, ஊழல் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் மற்றும் போதைப் பொருள்களைத் தடுக்க தனி சிறப்புப்படை, கல்வி, மருத்துவத்துக்கு கூடுதல் நிதி, அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம், தமிழில் பெயர் வைத்தால் சிறப்பு ஊக்கத் தொகை, பயிர்க்கடன் தள்ளுபடி, சென்னையில் அனைத்துப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச அனுமதி, கோயில் நிலங்களை விற்கத் தடை உள்ளிட்ட 137 திட்ட பரிந்துரைகள் உள்ளன.

ரூ.6 லட்சம் கோடி முறைகேடு: முந்தைய திமுக ஆட்சியில் மணல் கொள்ளை, கனிமவளக் கொள்ளை, பணியாளர் நியமனம், ஒப்பந்தங்கள், பணியிட மாற்றம் ஆகியவற்றில் முறைகேடுகள், மது வணிகம், வரி ஏய்ப்பு என ரூ.6 லட்சம் கோடி அளவுக்கு முறைகேடுகள் நடந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அவை குறித்து வழக்குப் பதிவதுடன், தனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தும் விசாரிக்க வேண்டும். தற்போதைய தவெக அரசு கடந்த திமுக ஆட்சி ஊழல்கள் குறித்த விசாரணையில் மெத்தனமாக செயல்படுவது சரியல்ல.

மேக்கேதாட்டு பிரச்னையில் கர்நாடக முதல்வரை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் சந்திப்பது சரியல்ல. அதற்குப் பதிலாக அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டுவதுடன், சட்டப்பேரவை, மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களுடன் பிரதமரைச் சந்திக்க வேண்டும். சட்ட ரீதியாகவே மேக்கேதாட்டு பிரச்னையை அணுகவேண்டும் என்றார் அன்புமணி ராமதாஸ்.

அறிவிப்பு

எனது கட்சிக்காரர் **திரு.சாம் பால்** என்பவருக்காக இதன் மூலம் அறிவிக்கும் அறிவிப்பு என்னவென்றால், **திரு.சாம் பால் த/பொ.ஜாண்** (கதவு எண்: 1041/128, வேலாயுத நகர், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி - 627401, என்பவரின் அலுவலக அசல் பத்திரமான அம்பாசமுத்திரம் சார்பதிவகார் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரையப் ஆவண எண்: **93/1998** ஆவண பதிவு செய்த நாள் **12.02.1998**, கூடிய **23.02.2026** அன்று சுமார் காலை **11.00** மணியளவில் அலுவலக வீட்டிலிருந்து ஆவணத்தை எடுத்து சென்றும் பொதுத் அம்பாசமுத்திரம் பேருந்து நிலையம் அருகில் ஆவணம் காணாமல் போனது ஆவணத்தை பல இடங்களில் தேடியும் ஆவணம் கிடைக்கவில்லை, பின்னர் **27.07.2026** அன்று திருநெல்வேலி மாவட்ட காவல் துறையில் ஆன்லைன் காவல் புகார் அளித்துள்ளார் புகார் குறிப்பு எண் **OLC6082600042080**, பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே, பொது மக்கள் அந்த ஆவணத்தைக் கண்டெடுத்தால், அதனை ஆட்சேபனை இருந்தால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 7 நாட்களுக்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

R.HARTHARAN B.A.,B.L., ADVOCATE, Tirunelveli Branch Office-II,No.1, Pillai Nagaraar Street, Wanchaimanallai Hospital(opp), Tirunelveli-627002

CHANGE OF NAME

I S ANTHONY SILUVAI SANTHANA, S/o.Siluvai Pitchai, Born on **12.08.1973** (Native District Thoothukkudi) residing at Door No. 4/75, Main Road, Pothakalanvilai, Sasthavinallur, Thoothukkudi District - 628 702 Shall be hence forth known as **Antony Dasan S S ANTHONY SILUVAI SANTHANA**

Tirunelveli
27.07.2026

CHANGE OF NAME

I, **Ponnammal, W/o. Ramasubramanian,** born on **21-07-1980** (Native District: Tuticorin), residing at No: 134, south Car Street, Tiruchendur, Tiruchendur Taluk, Tuticorin District Pin - 628215 shall henceforth be known as **Sornalakshmi.**

Ponnammal

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 17.08.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கன்னியாகுமரி, பீச் ரோடு நாகர்கோயில், 0125250700047149, 8053, 8455, 0125250730010905, 0906, கன்னியாகுமரி, 0102100700772262, 4393, கொளச்சல், 0102130730004590, கோட்டார் நாகர்கோயில், 0102490700757058, குழித்துரை, 0102890730008914, மேக மண்டபம், 0133260700044517, நாகர்கோயில், 0124420730006929, நாகர்கோயில் ரோடு திங்கள் சந்தை, 0128330730007453, வடசேரி ஜங்ஷன், 0102980700069395, 0102980730010767, ஆலங்குளம், 0102410700778052, 0115, கீழப்பாவூர், 0126790700051031, 1428, 0087, தென்காசி, 0104530700759367, 0104530730023249, 3257, 3258, தூத்துக்குடி, சாத்தான்குளம், 0133240700053374, 3796, 4169, 6875, 0133240730013658, 3756, 8686, 8697, 8698, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், 0103330700831391, 3003, 0103330730031363, 1904, 3317, 3435, 3436, 7572, 7575, 7578, 7580, 7581, 7582, 7583, கடையம் திருநெல்வேலி, 0130750730023160, 3161, கூடையநல்லூர், 0124390700029195, 0124390730011707, கலக்காடு திருநெல்வேலி, 0126650730017611, 7613, 0126650750000144, மேலகரம் திருநெல்வேலி, 0121630700035322, 0121630730019514, 9515, 9519, பாளையங்கோட்டை, 0136220700010847, 1817, 1878, 2031, 2712, 0136220730018128, 1347, 1348, 1349, 0129, பூபுரம் திருநெல்வேலி, 0120380700041093, 2629, 2790, 0120380730015369, 0903, 0998, திருநெல்வேலி, 0103290700789442, 0414, 2759, 3659, 4413, 4995, 5203, 5239, 5279, 0103290730032033, 7620, 7621, 7622, தூத்துக்குடி, சிதம்பரம் நகர் தூத்துக்குடி, 0117830700066375, 0117830730029910, 5192, காமராஜ் சாலை திருச்செந்தூர், 0118490700071471, 1868, 3268, 3598, 4265, 4569, 4774, 7570, 0118490730025475, 5478, 5479, 5480, 5482, கயத்தாறு தூத்துக்குடி, 0115020700048785, 8789, 9950, 0127, 1667, 1671, 1876, 2654, 4375, 4530, 4726, 4746, 5248, 5278, 5735, 7521, 0115020730026343, 7711, 7781, 2760, 2761, 2767, கோவில்பட்டி, 0102620700072566, 3070, 3663, 3816, 4037, 4068, 6136, 6137, 6140, 0102620730036740, 9940, 6164, 6170, 6174, 6175, 6176, 6179, 6182, நஸரத், 0102940700763813, 5898, 0102940730016507, விளாத்திகுளம், 0102870700748944, 9932, 9967,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

ஞாயிற்றுக்கிழமைதோறும் இளமை! புதுமை! இனிமை! தினமணி கதிர்

HDFC BANK

ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்

கிளை : தாகூர் தியேட்டர் ரோடு, அஞ்சல் பெட்டி எண். 2288, வழுதக்காடு, திருவனந்தபுரம் - 695010. போன்: 0471-6170373/6170372.
CIN L65920MH1994PLC080618 இணையதளம்: www.hdfcbank.in

கேட்பு அறிவிப்பு

2002ம் ஆண்டின் செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் 2002ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3ன் கீழ் விடுக்கப்படுவது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் மேற்படி செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி எண்.3-ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ளவர், தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள, கடன்தாரர்(கள்) சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ், கீழ்வரும் தேதியில் கேட்புத் தொகை அறிவிப்புகள் (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் அறிவிப்பில் கண்ட தொகையினை அதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார். மேலும் அந்த அறிவிப்புகளை அந்தந்த கடன்தாரர்(கள்) இறுதியாகத் தெரிந்த விலாசத்தில் ஒட்ட வகை செய்தார். மேற்கூறிய அறிவிப்புகளின் உண்மை நகல்கள் அவ்வதிகாரியிடம் உள்ளதால் கீழ்வரும் கடன்தாரர்களுக்கு அவை தேவை இருப்பின், வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அன்னாரை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய நிலையில் இந்த கேட்புத் தொகை அறிவிப்பின் மூலம் மேற்படி கடன்தாரர்(கள்) / சட்டபூர்வ பிரதிநிதி(கள்) தாங்கள் எங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தேதி வரையிலான தொகையினை இந்த அறிவிக்கை வெளியீட்டு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கேட்புத் தொகை அறிவிப்பில் கண்டுள்ள விபரப்படி 18 சதவிகித வட்டி விகிதத்தில், கீழே நிலுவைத் தொகைக்கான கட்டத்தில் தரப்பட்டுள்ள தேதியிலிருந்து தொகைகளைச் செலுத்தும் காலம் வரையிலும் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** -க்கு செலுத்த வேண்டுமாறு மீண்டும் ஒருமுறை கோரப்படுகிறார்கள். மேலும் கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள சொத்தினை கடன் பத்திர பாதுகாப்பிற்காக **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்**-க்கு கடன்தாரர் அடமானம் செய்துள்ளார்.

பினையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்(கள்) கவனம் ஈர்க்கப்படுகிறது.

வ எ எண்.	கடன்தாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) பெயர் மற்றும் விலாசம்	மொத்த கடன் நிலுவைத் தொகை	கேட்புத் தொகை அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து)
(a)	(b)	(c)	(d)	(e)
1.	**திருமதி.ரெம்ஜியஸ் ஃபெல்சி ஜெபதுரை** மற்றும் **திரு.ஜீவஸ் டேனியல் அசோக் ஜெபதுரை** எண்.12/1B, தெரேஸ்புரம் மெயின் ரோடு, தெரேஸ்புரம், தூத்துக்குடி – 628 001 **திருமதி.ரெம்ஜியஸ் ஃபெல்சி ஜெபதுரை**, எண்.58, LIC பீச் ரோடு, தூத்துக்குடி – 628 001	*ரூ.7,39,164/- (ரூபாய் ஏழு லட்சத்து மூப்பத்து ஒன்பதாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மட்டும்) 30.04.2026 தேதி வரை	10.06.2026	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு மாவட்டம், தூத்துக்குடி டவுன், பழைய டவுன் சர்வே எண்.5910/24, புதிய டவுன் சர்வே எண்.5910/26A2 மற்றும் 5910/27, டவுன் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.50, தெரேஸ்புரம் வீதி, கதவு எண்.12/1B ல் உள்ள 99.005 சதுர மீட்டர் (1065.69 சதுரடி) நிலம் மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் உள்பட சொத்திற்கான **எல்லைகள் :** மேற்கு – ஜாக்குலின், தமிழரசி, ராணி க்குச் சொந்தமான சொத்து, வடக்கு – ஆண்ட்ரூசின் வீடு மற்றும் தென்வடல் பொது வழித்தடம், தெற்கு – J.ஜீவஸ் விவிங்ஸ்டன் கார்த்திக்கிற்குச் சொந்தமான பொதுச் சுவர், கிழக்கு – டவுன் சர்வே எண்.5910/25 தென்வடல் ரோடு.

* மேலும் 18 சதவீத வருட வட்டி, பிற செலவுகளுடன், தொகையை திருப்பிச் செலுத்தும் காலம் வரை.

மேற்கூறியபடி **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்**-க்கு திருப்பிச் செலுத்தத் தவறும்பட்சத்தில் கடன்தாரர்(கள்) மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் மேற்படி பினையச் சொத்திற்கு/அசையாச் சொத்திற்கு எதிராக **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்**-ன் மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு, அதற்குண்டான செலவுகளுக்கும், விளைவுகளுக்கும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்களே பொறுப்பு.

மேற்படி கடன்தாரர்(கள்) / சட்டபூர்வ பிரதிநிதி(கள்) மேலே குறிப்பிட்டுள்ள சொத்தினை **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** -ன் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரையமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேதி : 27.07.2026
இடம் : திருவனந்தபுரம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ஹெச் டி எஃப் சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல் (மேற்கு), மும்பை – 400020

இந்தியன் வங்கி | இலாஹாபாத் அலகாபாத்

சூழல் கிளை

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீராக்குதல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம்(SARFAESI ACT)2002, 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

ஒப்புதலுடன் சுடிய பதிவு தபால், இடம்: சூழல், தேதி: **03.07.2026**

அனுப்புநர்: ஸ்ரீமதி.K. சஜா, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், இந்தியன் வங்கி, மண்டல